**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**நாள்.03.06.2025**

**O.S. No.37/2020**

**வா.சா.1 – முத்துமாரி**

**1முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் பிராதில் என்ன பரிகாரம் கேட்கிறேன் என்றால் சொத்து வேண்டும் என கேட்டுள்ளேன். நான் வழக்கில் விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் எனது முந்தைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில் வழக்குச் சொத்தில் 1ம் பிரதிவாதி பேரின்பம்தான் 30 ஆண்டுகளாக குடியிருந்து வந்தார் என்றால் சரிதான் என சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். இந்த நிலையில், நான் இந்த வழக்கில் சுவாதீனப் பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் சுவாதீனப் பரிகாரத்திற்கு நீதிமன்ற முத்திரைக் கட்டணம்செலுத்தவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு வழக்கு மூலமில்லை, நானே வழக்குச் சொத்தில் 1ம் பிரதிவாதி பேரின்பம்தான் 30 ஆண்டுகளாக குடியிருந்து வந்தார் என ஒப்புக்கொண்டிருப்பதால் சுவாதீனப் பரிகாரம் கேட்காமல் தாக்கல் செய்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரிதான். யாக்கோபுவின் 2 மகன்கள் சார்பதிவாளர் அலுவலகம் சென்று பாகப்பிரிவினை செய்துள்ளார்களா என்றால் பாகப்பிரிவினை செய்யவில்லை. யாக்கோபுவின் 2 மகன்கள் நீதிமன்றம் சென்று பாகப்பிரிவினை செய்துள்ளார்களா என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ன் அசல் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ன் அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மை விவரம் தெரியவந்துவிடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ன் அசல் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ல் யார் யார் கையொப்பம் போட்டுள்ளார்கள் என்ற கையொப்பம் இல்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 பட்டாவிற்கு அனுசரணையாக எந்தவிதமான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 ன் அசல் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 ன் அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மை விவரம் தெரியவந்துவிடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

வா.சா.ஆ.5 ன் அசல் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 ன் அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மை விவரம் தெரியவந்துவிடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ன் அசல் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ன் அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மை விவரம் தெரியவந்துவிடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1 முதல் 6 ல் எந்த பத்திரத்தில் தாவா சொத்து சொல்லப்பட்டுள்ளது என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 வில்லங்கச் சான்றிதழ் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது, இந்த வழக்கிற்கு சம்பந்தம் இல்லாதது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.8 பட்டா மாறுதல் உத்தரவு மோசடியானது, சட்டப்படி சரியானது அல்ல என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.9 கூட்டுப்பட்டா என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 22.11.2019 தேதியிட்ட திருவேங்கடம் வருவாய் வட்டாட்சியரின் செயல்முறை ஆணை பிறப்பித்து மனுதார் பேரின்பம் மேற்படி புல எண் இடத்தில் 60 ஆண்டுகளாக வீடுகட்டி குடியிருந்து வருவதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். **22.11.2019 தேதியிட்ட திருவேங்கடம் வருவாய் வட்டாட்சியரின் செயல்முறை ஆணையை சாட்சி ஒப்புக்கொண்டிருப்பதால் மேற்படி 22.11.2019 தேதியிட்ட திருவேங்கடம் வருவாய் வட்டாட்சியரின் செயல்முறை ஆணை பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி பி.வா.சா.ஆ.1 ஐ அனுசரித்து பேரின்பம் பெயரில் புல எண்.399/1 C4A க்கு பேரின்பம் பெயரில் நத்தம் நிலவரித்திட்ட தூய சிட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் பேரின்பம் பெயரில் புல எண்.399/1 C4A க்கு பேரின்பம்பெயரில் நத்தம் நிலவரித்திட்ட தூய சிட்டா என்றால் சரிதான். **சாட்சி பேரின்பம் பெயரில் புல எண்.399/1 C4A க்கு பேரின்பம்பெயரில் நத்தம் நிலவரித்திட்ட தூய சிட்டாவை ஒப்புக்கொண்டிருப்பதால் மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் வீட்டுமனைப்பட்டா புல எண்.399/1C4A க்கானது என்றால் சரிதான் ஆனால் அதில் என்ன பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என தெரியவில்லை. **சாட்சி வீட்டுமனைப்பட்டா புல எண்.399/1C4A க்கானது என ஒப்புக்கொண்டிருப்பதால் மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.3 ல் பேரின்பம் என உள்ளது என்றால் பேரின்பம் என உள்ளது, ஆனால் அழிந்துள்ளது.

என்னிடம் காட்டப்படும் அ பதிவேடு புல எண்.399/1 C4A க்கானது என்றால் சரிதான். அதில் பேரின்பம் பெயர் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். **சாட்சி மேற்படி "அ" பதிவேடு புல எண்.399/1C4A க்கானது பேரின்பம் பெயரிலானது என்பதை ஒப்புக்கொண்டிருப்பதால் மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னால் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.10 ன்படி பட்டா மாறுதல் உத்தரவு ரத்து செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.11 வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது, கூட்டுப்பட்டா கேட்டு மனு செய்திருப்பது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வாதி பெயரிலான பட்டாவை ரத்து செய்யக்கேட்டு எந்தப் பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வரி செலுத்தியதை காட்ட தீர்வை ரசீது எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.12 வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வாசா.ஆ.14 புகார் மனுவில் முதல் தகவல் அறிக்கை வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.14 ல் நிலப் பிரச்சனை என மட்டும் தான் சொல்லப்பட்டுள்ளது. வேறு எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த புகார் பொய் என்பதால் நடவடிக்கை எடுக்கவில்லை, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.16 ல் நிலப் பிரச்சனை என மட்டும் தான் சொல்லப்பட்டுள்ளது. வேறு எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த புகார் பொய் என்பதால் நடவடிக்கை எடுக்கவில்லை, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வேண்டுமென்ற புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.18 பிராது வரைபடம் என்ன என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.18 ல் கையொப்பம் போடவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.18 ல் 1வது மற்றும் 2 வது அயிட்ட தபசில் சொத்துக்களின் நீள, அகலம் பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.18 ல் பார்வதி அம்மாள் இடத்திற்கும் நீள, அகலம் பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் பார்வதி அம்மாளை கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் பார்வதி அம்மாளை கட்சி சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.18 தாவா இடத்திற்கானது அல்ல, நான் வழக்கிற்காக உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.18 அளவு குறிப்பிடாத வரைபடம் என சொல்லவேண்டும், ஆனால் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு இந்த வழக்கில் எந்த வழக்குமூலமும் இல்லை, இந்த வழக்கில் செலுத்தியுள்ள முத்திரைக் கட்டணம் தவறு, பரிகாரம் தவறு, அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் தாவா இடத்தில் பேரின்பம் போட்டு வைத்துள்ள குப்பையை அகற்றச் சொல்லி நடவடிக்கை எடுக்க நீதிப்பேராணை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எங்கள் கிராமத்தில் அனைத்து வீடுகளிலும் மாடு வளர்க்கிறார்கள் என்றால் சரிதான். அதனால் குப்பையை வீட்டின் முற்றத்தில் வைப்பார்கள் என்றால் பேரின்பம் எனது வீட்டின் குப்பை போட்டிருந்தார். பேரின்பம் குப்பையை ஓரமாகத்தான் போட்டிருந்தார், நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சொத்து யாருக்குரியது என எந்த உத்தரவும் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரிதான்.

**1 முதல் 3 வரையுள்ள பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**4 வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

(Sd.) xxxxxxx
Principal District Munsif,
Sankarankovil.